கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் அமைத்தல்

137—(*வினா எண். 7707) திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் எத்தனை கால்நடைகள் எண்ணிக்கை இருந்தால் ஒரு கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைக்கலாம் ?

(ஆ) கால்நடை மருந்தகத்திற்கு மருத்துவப் பெருமனை அமைத்திட எவ்வளவு கால்நடைகள் ஊரில் இருக்க வேண்டும் என்ற வரையறை உள்ளதா ?

(இ) இல்லையெனில் அப்படி வரையறையை அரசு உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, (அ) இனவிருத்திக்கு ஏற்ற வயதுக்கு வந்த பசுக்களும்/எருமைகளும் 1000-க்கு குறையாமல் இருக்கும்போது நிதி நிலைக்கு ஏற்ப கிளை நிலையம் தொடங்கப்படுகிறது.

(ஆ) பொதுவாக கால்நடை மருந்தகந்தான் மருத்துவ மனையாக தரம் உயர்த்தப்படுகின்றது. அப்படி தரம் உயர்த்த கீழ்க்கண்ட வரைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன:—

(1) அந் நிலையத்திற்கு சிகிச்சை பெறும் கால்நடைகளின் தினசரி வருகை 50-க்கு மேல் இருக்க வேண்டும்.

(2) அந் நிலையம் அரசுக்கு சொந்தமான மனையில் அரசினால் கட்டப்பட்ட நிலையமாக இருக்க வேண்டும்.

(3) உள்நோயாளிகள் கூடம் அமைப்பதற்கும் நிலையப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டவும் பிற்காலத்தில் விரிவாக்கத்திற்கும் தேவையான இடவசதி இருக்க வேண்டும்.

(4) மருத்துவ மனை மற்றும் குடியிருப்புகளின் தேவைக்கு ஏற்ற தண்ணீர் வசதி இருக்க வேண்டும்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.